பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

அடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 07 ஞாயிற்றுக்கிழமை (23 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 269

# ஒப்பரேசன் பூமியதிர்ச்சியின் முதற்கட்டம் முடிவுற்றதாம்!

## வடமராட்சிப் பகுதியை நோக்கி அடுத்த நடவடிக்கை என அறிவிப்பு

கொழும்பு, ஆக. 23

மாதகல் பகுதியைக் கைப்பற்றியதுடன் "ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி" நடவடிக்கையின் முதற்கட்டம் முடிவடைந்ததாகவும் —

அடுத்து பலாலியிலிருந்து கிழக்குப் பக்கமாக வடமராட்சியை நோக்கி "ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி" நடவடிக்கை இரண்டாவது கட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் —

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமையகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் —

மாதகல் துறைப் பகுதியிலும், காடைப்பு ஆஸ்பத்திரிப் பகுதியிலும் தரித்திருந்த இராணுவத்தினர் ஷெல் மற்றும் கலிபர், தாக்குதல்களை நடத்தியதைத் தவிர பெரும் இராணுவ நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை. எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ரெறன்ஸ் பெர்னாண்டோ ஆகியோர் நேற்று முன்தினம் பலாலிக்குச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

## மல்லாகம், அளவெட்டியில் விமானங்கள் அனர்த்தம்!

யாழ்ப்பாணம், ஆக. 23

வலி. வடக்கு மற்றும் பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் நேற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மல்லாகம் பகுதியில் இரண்டு இடங்களில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இரண்டு பொம்மர்கள் தொக்கட் தாக்குதலையும், குண்டுத் தாக்குதலையும் நடத்தின. கலிபர் வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

மல்லாகம் குளமங்கால் பகுதியில் கோணர்குளம் வயிரவர் கோயிலடியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் அகதி முகாம் ஒன்றும் வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

அகதிமுகாமில் தங்கியிருந்த மக்கள் முன்கூட்டியே வெளியேறியிருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

இத் தாக்குதலில் சிக்கி வசந்தராணி [வயது 22], எஸ். செல்வராசா [வயது 35] ஆகியோர் காயமுற்றனர். சில வீடுகள் சேதமுற்றன.

மல்லாகம் ரயில் நிலையத்துக்கு அண்மையில் மல்லாகம் — கட்டுவன் வீதிச் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் வீதி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றும் கடும் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 23

வலி மேற்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட படையினர் நேற்றுக்காலை முதல் விட்டு விட்டு ஷெல் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தனர்.

இதனால் பொதுமக்களின் உடமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

அனேக ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது விழுந்த போதிலும், அனேகமாக அப்பகுதிகளில் இருந்து பொது மக்கள் ஏற்கனவே வெளியேறியிருந்ததால் உடல், உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் ஆலயப் பின் வீதியில் விழுந்த ஷெல்லினால் நால்வர் காயமடைந்தனர்.

இராசையா ந. புவனேஸ்வரி [வயது 58], கந்தசாமி சரோஜா [வயது 24], செ. சிவபாதசுந்தரம் [வயது 39] ஆகியோரும் மற்றொரு சிறுவனுமே இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

சுமார் 8 ஷெல்கள் இப்பகுதியில் வந்து விழுந்து வெடித்தன. இதனால் பல கால்நடைகள் உயிரிழந்தன; பல வீடுகளும் சேதமடைந்தன.

சில ஆட்லறி ஷெல்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சுமார் ஒரு லட்சம் மக்கள் 3 நாட்களில் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 23

கடந்த மூன்று நாட்களாக வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

யாழ். செயலக அதிகாரிகள் இந்த மதிப்பீட்டை உத்தேசமாகச் செய்தபோதிலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து உத்தியோகபூர்வ எண்ணிக்கைகள் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை.

முதல் இரண்டு நாட்களில் மட்டும், அளவெட்டி, இளவாலை, விளான், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் தாம் உடுத்த உடையுடன் நிர்க்கதியாக வெளியேறியதாக உதவிச் செயலாளர்கள் அனுப்பிய தகவல்களில் இருந்து மதிப்பிட முடிகிறது.

நேற்று மல்லாகம் பகுதியில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர்.

வலி வடக்கில் இருந்து வெளியேறிய அகதிகளில் பெரும்பாலானோர் சண்டிலிப்பாய், மானிப்பாய், உடுவில், கந்தரோடை, தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் பாடசாலைகள், ஆலயங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மானிப்பாயில் மட்டும் மொத்தம் 43 முகாம்கள்

உடுவில், ஆக. 23

கடந்த மூன்று நாட்களில் மானிப்பாய் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து வந்த மக்களுக்காக மொத்தம் 43 முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இருந்த இருபத்தேழு முகாம்களுடன் புதிதாக 16 முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வரும் இம்மக்கள் கோவில்கள் பாடசாலைகளில் தங்கி உள்ளனர்.

இளவாலை, பண்டத்தரிப்பு வடலியடைப்பு, இல்லாலை பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் சண்டிலிப்பாய், உடுவில், நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை சுன்னாகம், கந்தரோடை ஆகிய பகுதிகளில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவத்திடம் சிக்கிய மக்கள் ரூபவாஹினியில்

யாழ்ப்பாணம், ஆக. 23

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்குண்ட பலரை நேற்று ரூபவாஹினியில் பார்க்க முடிந்தது.

அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படும் போதும், பத்திரிகையாளர் பேட்டி காணும்போதும் எடுக்கப்பட்ட படங்களை ரூபவாஹினி நேற்றிரவு காண்பித்தது.

அவர்களில் இளவாலைப் பாடசாலையைச் சேர்ந்த சங்கைக்குரிய சகோதரிகளையும், மாணவிகளையும் மற்றும் வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலரைப் பார்க்க முடிந்தது.

அவர்களின் நலன்களை இராணுவ அதிகாரிகள் கவனிப்பதாக ரூவஹினிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## குழப்பம் ஏற்படுத்த ஜே. வி. பி. முயற்சி!

### பிரேமா எச்சரிக்கை

கொழும்பு, ஆக. 23

ஜே. வி. பியினர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்று வருகின்றனர். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் அவர்கள் செல்வாக்குப் பெற முயன்று வருகின்றனர்.

— இவ்வாறு மக்களுக்கு நேற்று எச்சரிக்கை விடுத்தார் ஜனாதிபதி பிரேமதாஸா.

பதுளையில் நேற்று நடந்த ஐ. தே. கவின் மாவட்ட மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தீய சக்திகள் தெரிந்தோ தெரியாமலோ ஜே. வி. பியினருக்கு ஆதரவு வழங்கி வருகின்றன. குழப்பத்தை ஏற்படுத்தும் ஜே. வி. பியினர் விடயத்தில் மக்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்." — என்றும் அவர் கூறினார். (உ-5)

## இன்று புலமைப்பரிசில் பரீட்சை:

### பண்டத்தரிப்புப் பிரிவில் பரீட்சை நிலைய மாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 23

இன்று நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கு பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவில் முன்னர் அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் பல இடம்மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக பண்டத்தரிப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். வி. மகேசவேலு அறிவித்துள்ளார்.

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் பரீட்சை நடைபெறவுள்ள 24 நிலையங்களில் 12 நிலையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதேவேளை குடாநாட்டின் ஏனைய இடங்களில் முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் திரு.

[6 ஆம் பக்கம் பார்க்க]

வேரோட நீர் வேண்டும்
நீர் தேக்க குளம் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்மலானை கொள்ளை; பெண் உட்பட 4பேர் கைது!

கொழும்பு. ஆக. 23

இரத்மலானை ரெயில்வே வேலைத்தள தொழிலாளர்களின் சம்பளப் பணம் ரூபா 48 லட்சம் பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட 4 சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வுத்துறையினர் கைது செய்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட பணத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாவையும், கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட தன்னியக்க ரைபிள் ஒன்றையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஜே. வி பி யுடன் தொடர்புடையவர்கள் என்றும்—

ஜே. வி. பி. உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கவே இந்தப் பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து அறியவந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.


## நன்றி

20-08-92 இல் எஸ். நாகராசாவினால் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட 3½ பவுன் நிறை உடைய எனது தங்கச் சங்கிலி 21-08-1992 இல் காவல்துறை அதிகாரி திரு. நடேசன் முன்னிலையில் சி. நாகராசா என்பவரால் எமக்கு கையளிக்கப்பட்டது.

திருமதி சு. நிர்மலபவானி
இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[22273]



வட - யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம் ஒத்திவைத்தல்

1992-08-24 (நாளை) நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகிறோம்.

நன்றி.

உபசெயலாளர்,
மு. பத்மநாதன்
[வெல்கோ மருந்தகம்]

[5268]



## கண்ணீர் அஞ்சலி

அமரர் இராசசுந்தரம் குமாரசுப்பிரமணியம்

யாழ். சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி பௌதிகவியல் ஆசிரியர் திரு. இராசசுந்தரம் குமாரசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22-08-92) சனிக்கிழமை திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டார்.

ஈடுசெய்ய முடியாத இழப்பினை ஏற்படுத்திய அன்னாரது மறைவு எம்மை தாங்கவொண்ணாத் துயரத்தில் மூழ்கவைத்து விட்டது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஆ. கனகரத்தினம்
செயலாளர்.
22-08-92 (22276)

ஆசிரியர் கழகம்,
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 04 — 1925



இறப்பு: 24 — 08 — 1990

திருமதி
ஆன்றோஸ் அந்தோனிப்பிள்ளை

காலம் எல்லாம் நாம் கதறி அழ, எம்மை விட்டு பிரிந்த தாயே! எம் கண்ணீரையே உமக்கு காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 24-8-92 இல் யாழ் புனித யுவானியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்;
கணவர், சகோதரர், சகோதரி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

[22264]


# தி. மு. கவின் அனுதாபத்தை புலிகள் இழந்து விட்டனர்!

## கலைஞர் கருணாநிதி புதிய தாளம்!!

சென்னை, ஆக. 23

ராஜீவ்காந்தி, பத்மநாபா கொலை வழக்குகளில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டதாகத் தெரியவந்ததிலிருந்து அவர்கள்பால் தி. மு. க. கொண்டிருந்த அனுதாபத்தை அவர்கள் இழந்துவிட்டனர். — இவ்வாறு தி. மு. க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் —

விடுதலைப் புலிகளிடமோ அல்லது வேறு எந்த இலங்கைப் போராளிக் குழுக்களிடமோ தமது கட்சி பரிவு கொண்டிருக்கவில்லை — என்றார்.

விடுதலைப் புலிகளுடன் எமது கட்சி ஒருபோதும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவில்லை — என்றும் அவர் தெரிவித்தார்.

1989 - ஆம் ஆண்டு தான் முதலமைச்சராக இருந்தபோது பல்வேறு போராளிக் குழுக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர், இலங்கை வடக்கு — இழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் மற்றக் குழுக்களுடன் ஒத்துழைக்க விடுதலைப் புலிகள் மறுத்தனர் — என்றும் கூறினார்.

## இன்று

யாழ்ப்பாணம். ஆக. 23

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை வருடந்தோறும் 8 ஆம் மாத காலத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டங்களை, விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனையின் வலிகாமக் கோட்டப் பிரிவு வட்டரீதியாக நடத்தி வருகின்றது.

அத்தொடரில் இன்று இரவு 7. 30 மணிக்கு யாழ்ப்பாணம் வட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் கூட்டம் நடைபெறும்.

[உ]

* * *

சாவகச்சேரி, ஆக. 23

மட்டுவில் லெப். கேர்ணல் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள கப்டன் தீபன் பாலர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகள் கப்டன் ஜெகன் மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் ஒருமணிக்கு நடைபெறும். [இ-31]

★ ★ ★

கொழும்புத்துறை. ஆக. 23

தமிழ்மாமன்றம் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு நடாத்தும் சமய அறிவுப் போட்டி இன்று காலை 8. 30 மணிக்கு திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். [அ-30]

## உற்சவங்கள்

தென்மராட்சி, ஆக. 23

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி விநாயகர் அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

[த-117]

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக. 23

யாழ். குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத் திருவிழா நேற்று 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து இம் மாதம் 27 ஆம் திகதி வியாழக் கிழமை வரை திருவிழா நடைபெறும். [உ-30]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 23

ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ அம்பாள் அணி எதிர் சென். தோமஸ் அணி.

★ திவக நட்சத்திரம் "ஏ" அணி எதிர் றோயல் 'பி' அணி.

★ ஸ்ரீ முருகன் அணி எதிர் சென். லூட்ஸ் அணி.

[த]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 23

அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 9-30 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் அரியாலை அணியை எதிர்த்து சென். [illegible] கழக அணி மோதும்.

[உ]

# இ. காங்கிரஸ் அரசுக்கு பெரும்பான்மை கிடைத்தது

புதுடில்லி, ஆக. 23

இந்திய நாடாளுமன்றத்தில் தனது தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து சிறுபான்மை அரசை அமைத்திருந்த காங்கிரஸ் கட்சி நேற்று நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டது.

தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து குமாரராஜா தலைமையில் தனியாகப் பிரிந்து சென்று தனிக்குழுவாக இயங்கிவந்த எம். பிக்கள் நேற்று காங்கிரஸ் கட்சியுடன் உத்தியோகபூர்வமாக இணைந்தனர்.

அந்த எம். பிக்களையும் சேர்ந்து 532 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகளின் எம். பிக்களின் எண்ணிக்கை 267 ஆக உயர்ந்தது.

# அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவு முறிந்தது!

தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. கவுக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் இருந்து வந்த கசப்பு நிலை முற்றி, உறவு முறியும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸை எதிர்த்து அ.தி மு.க. போட்டியிடும் என அ.தி.மு.க. பிரமுகரும் மாநில கல்வி அமைச்சருமான அரங்கநாயகம் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தோழமைக் கட்சியான அ.தி மு.க. வின் உதவியின்றியே தனது அரசை ஸ்திரப்படுத்தக் கூடிய நிலை பிரதமர் நரசிம்மராவின் காங்கிரஸ் அரசுக்கு கிடைத்திருப்பதால் —

தமிழகத்தில் அ. தி. மு. க. வினர் புரிந்துவரும் கொட்டத்தை இனிமேலும் காங்கிரஸ் பொறுத்திருக்காது என முன்னர் செய்தி வெளியாகியது. தெரிந்ததே,

முன்னர் சட்டசபை, மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்ட இக் கட்சிகள் இனிநடைபெறவிருக்கும்பழனி நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தலில் எதிரும் புதிருமாக நிற்கும் நிலை தோன்றியுள்ளது. [உ-10]

# காங்கிரஸை தமது பக்கம் திருப்ப கலைஞர் முயற்சி!

சென்னை, ஆக. 23

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டுறவில் ஏற்பட்டிருக்கும் பிளவைப் பயன்படுத்தி காங்கிரஸைத் தம் பக்கம் திருப்ப கலைஞர் கருணாநிதி முயல்வதாகத் தெரிகிறது.

இதற்காகத்தான், விடுதலைப் புலிகள் தமது கட்சியின் (தி. மு. கவின்) அனுதாபத்தை இழந்து விட்டார்கள் என்ற புதிய 'தாளத்தை' கருணாநிதி போடத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமது கட்சித் தலைவரான ராஜீவ் காந்தி கொலையுண்டதற்கு புலிகளே காரணம் என காங்கிரஸ்காரர்கள் கருதுவதால், அவர்களின் ஆதரவைச் சம்பாதிக்க புலிகளுக்கு எதிராக கருணாநிதி இப்போது திடீரென கருத்து வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது தாம் சுமத்தியிருக்கும் ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்துக்கு காங்கிரஸ் ஆதரவைப், பெற்று அக்கட்சியின் உதவியுடன் ஜெயலலிதா அரசை பதவியிறக்க கருணாநிதி முயல்வதாகவும் கூறப்படுகிறது.

## மானிப்பாயில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கி உள்ளனர்.

உடுவில் செபமாலை மாதா கோவில், உடுவில் மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயம், மானிப்பாய் அந்தோனியார் ஆலயம், ஆனைக்கோட்டை தென் இந்திய திருச்சபை, நவாலி வேலக்கை பிள்ளையார் ஆலயம். மற்றும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தமிழ் கந்தையா வித்தியசாலை, சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம், சுதுமலை வடக்கு பாடசாலை, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர்.

[அ-152]

## மரத்திலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஆக. 23

தென்னை மரத்தில் கள் இறக்க ஏறியவர், இராணுவம் வருகிறது எனக் கூறிக் கொண்டு மக்கள் கூட்டம் கூட்டமாக ஓடுவதைக் கண்டு அவசர அவசரமாக மரத்தில் இருந்து இறங்க முற்பட்டார்; அவ்வேளை கை, கால் தடுமாறி கீழே விழுந்து அவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் அளவெட்டி தெற்கில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த தம்பு தம்பித்துரை (வயது 50) என்பவரே காயமுற்றார்.

நேற்று முன்தினம் காயமடைந்த இவர் வாகன வசதியற்ற காரணத்தால் நேற்றே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தானை-இத்தியடி வீரகத்தி விநாயகர்


## ★ அலங்கார உற்சவச் சிறப்பிதழ் ★

23 - 08 - 1992 முதல் 02 - 09 - 1992 வரை

# வணங்கும் அடியார் வினைகளை வேருடன் வீழ்த்தும் இத்தியடி வீரகத்தி விநாயகன்

இந்தோனேஷியாவிலும் சாவகச்சேரி என்றொரு இடம் இருப்பதால் யாழ்ப்பாணத்துச் சாவகச்சேரிக்கும் ஒரு தனி மதிப்பு உண்டு. இந்துக் கல்லூரி இருப்பதனால் சங்கத்தானைக்கு மதிப்பு விநாயகப் பெருமான் கோவில் கொண்டிருப்பதால் இத்தியடிக்குத் தனிமதிப்பு

சுற்றந்திற்கழகு சூழ இருத்தல் என்பது போல, கோவிலுக்கழகு பக்தர்கள் சூழ



இருத்தல். சாவகச்சேரிக்குத் தனிச் சிறப்பு விநாயகர் ஆலயங்கள் எங்கும் பரந்துள்ளமை.

சிதம்பரத்திற்குத் தில்லை என்றொரு பெயர் உண்டு. தில்லை என்ற மரம் தலவிருட்சமாக இருப்பதால் அப் பெயர் வந்தது. இதே போன்று இத்தி மரம் தலவிருட்சமாக அமைந்திருப்பதால் இத்தியடி விநாயகர் என்று பெயர் பெற்றது.

எல்லா மூர்த்திகளும் வினைகளைப் போக்குமாயினும், விநாயகப் பெருமானை வணங்குபவர்களுக்கு அவர்களின் வினையை வேரோடு களைந்து விடுவார். சில மரங்களை முற்றாக வெட்டினாலும் அவை வேரிலிருந்து மறுபடியும் தழைக்கும். அதே போன்று மற்ற மூர்த்திகளை வணங்கினால் வினைகள் முற்றாக அழிவதில்லை. ஒரு மரத்தை வேரோடு களைந்து விட்டால் அது பின்பு முளை கொள்வதில்லை. இதனை தேவநாயனார் —

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

என்று கூறுகின்றார்.

விநாயகப் பெருமான் பார்வதி பரமேஸ்வரரின் மூத்த பிள்ளை. அதனால் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். தனக்கு மேலாக ஒரு தலைவர் இன்மையால் விநாயகர் என்றும், கணங்களுக்குத் தலைவர் ஆன படியினால் கணபதி என்றும், தன்னை வணங்குவோரின் விக்கினங்களை நீக்குபவர் ஆன படியினால் விக்கினேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

குமாரன் என்றால் பிள்ளை என்றே அர்த்தம். தமிழகம் எங்கும் குமாரன், குமார சுவாமி என்றால் பார்வதி பரமேஸ்வரரின் இளைய பிள்ளையாகிய சுப்பிரமணியரையே குறிப்பிடும். அவரைக் குமரக் கடவுள் என்றும் அழைப்பர். ஆனால் அவரைக்

**ஆத்மஜோதி**
**— நா. முத்தையா —**

குமரனார் என்பதில்லை. குமரன் என்றுதான் சொல்வார்கள். மூத்த பிள்ளைக்கே மரியாதை தோன்ற பிள்ளையார் என்று பெயரிட்டு அழைக்கின்றார்கள்.

### பிரணவம்

பிரணவம் தான் எல்லாவற்றுக்கும் முதல். பிரணவமாகிய ஓம் என்பதிலிருந்துதான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபமே பிள்ளையார். அவரது ஆனை முகம், வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

பிள்ளையார் சுழி போட்டே எதனையும் எழுதத் தொடங்குவது தமிழருடைய வழக்கம். முதலில் தேங்காய் உடைத்தே சமையல் தொடங்குவது தமிழரின் வழக்கம். தேங்காய் உடைக்கும் போதே பிள்ளையாரின் வணக்கம் ஆரம்பமாகி விடுகிறது.

குழந்தையாக இருந்து கொண்டே ஆதி முதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார் குழந்தை போல் தோன்றினாலும், பக்தர்களை ஒரேயடியாகத் தூக்கி விடுவதிலும் முதல்வராக இருக்கிறார். இதற்கு ஔவைப் பிராட்டியின் உதாரணமே போதும்.

ஔவையார் பெரிய கணபதி உபாசகி. பிரணவ ஸ்வரூபியான விநாயகரைப் புருவமத்தியில் தியானித்துக் கொண்டு, ஔவையார் யோக சாஸ்திரம் முழுவதையும் அடக்கியதான விநாயகர் அகவலைப் பாடி இருக்கிறார்.

இத்தியடி விநாயக மஹோற்சவம் இன்று ஞாயிறு (23-08 92) தொடங்கி பத்து நாட்களுக்கு நடைபெற இருக்கிறது. இப் பத்து நாட்களும் விநாயகரைக் குறித்து விரதம் இருந்து விநாயகர் அகவலை ஓதி வருவோமேயானால் எமது விக்கினங்கள் எல்லாம் அகன்று போகும். ★

# அழிவுகளிலிருந்து காக்கும் வல்லமையுள்ள கணபதி

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் மக்களின் விக்கினங்கள் தீர்த்து வைக்கும் விக்கினேசுவரன்.

எல்லா மக்களும் இன்பம் வேண்டியே வாழுகின்றனர். அவ்வின்பத்தை எவ்வாறு அடைவது என்பதைத்தான் எவரும் அறியமுடியாமலிருக்கிறது. எப்பொழுதும் நீங்காத இன்பத்தைப் பெறுவதற்கு வழி விநாயகரை உள்ளத்திலே இருத்தி உள்ளம் உருகி வணங்குவதேயாகும்.

மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விட்டு அல்லது சுருக்கி மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் வீரகத்தி விநாயகனை விசேட திருவிழாக் காலங்களிலே விரதமனுஷ்டிப்பதால் விக்கினங்களைப் போக்கின்றார்.

தினமும் வழிபடுபவருக்கு பிள்ளையாரைத் தப்பாமல் சார்ந்து வழிபடுபவருக்கு நல்வாக்கையும், நன்மனதையும், சகல செல்வங்களையும் கொடுத்து வருவது கண்கூடு. இப்புவியிலே எமது பிறவிப் பிணி நீங்கவும், எண்ணிய கருமங்கள் எளிதிலே முற்றுப் பெறவும் விநாயகனைப்

**செ. சுப்பிரமணியம்**
பி. ஏ. (டிப். இன். எட்)
அதிபர், கமலாசனி வித்தியாலயம், மட்டுவில்)

போற்றி வாழ்கிறோம்.

விநாயக வழிபாட்டு நெறியை காணபத்திய நெறி என்பர். இந்நெறி இந்தியா, திபெத், பர்மா, யாவா, இந்தோனேசியா, யப்பான், [illegible] நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதற்கு ஆதாரங்கள் பலவுள்ளன. காணபத்திய நெறியை இந்துக்கள் மட்டுமட்றி சமணர் பௌத்தர்களும் பின்பற்றி வருகின்றனர்.

தமிழர் தமது முதல் வழிபாட்டுத் தெய்வமாக விநாயகரையே வழிபட்டு எத்தொழிலையும் தொடங்குகின்றனர். எந்த நூல்களிலும் பிள்ளையார் காப்பு முதலில் கூறப்படுகிறது வழக்கமும் மரபுமாக உள்ளது.

சிங்கள மக்களிடமும் கணதெய்யோ என்று பிள்ளையாரை வணங்கும் வழக்கம் உண்டு; பௌத்த ஆலயங்களிலும் பிள்ளையாருக்கு ஓர் இடம் உண்டு.

உலகத்தை உள் நின்று ஊறுபடுத்தும் அழிவுச் சக்திகளை அடக்கியாளும் திறமையுடையவர் பிள்ளையார். அழிவுச் சக்திக்கு அடையாள

(5 ஆம் பக்கம் பார்க்க)


விநாயகனே,
வினை தீர்த்தருள்வாய்!
கீதா ஜுவல் ஹவுஸ்
இல. 12, நவீன சந்தை,
பிரதான வீதி,
சாவகச்சேரி.

விக்கினேஸ்வரா உன்
அருள் வேண்டும்...
சிவா றேடிங் கோ
டச்சு வீதி,
சாவகச்சேரி.

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க
அருள்வாய் ஐங்கரா!
ஜவுளி உலகின் புதிய
சங்கமம்
★ மம்மி டடி ★
100, கண்டி வீதி,
சாவகச்சேரி.

அலங்கார உற்சவம்
சிறக்க அருள்வாய்
விநாயகா வீரம்
எமக்கருள்வாய்!
ரெலி கோணர்
நவீன சந்தை,
சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகன்
அருள் எங்கும் விளங்குக!
சுவை அகம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

விநாயகனே
வெவ்வினைகள்
வேரறுக்க வல்லான்..
முருகன் அரிசி ஆலை
கண்டி றோட்,
சாவகச்சேரி.

துதிப்போர் வினை
அகற்றும் விநாயகா
சரணம்! சரணம்!
பிள்ளையார் கூட்டு
உடைமை
இல. 104, கண்டி வீதி,
சாவகச்சேரி.

இத்தியடிப் பிள்ளையாரே,
இன்னல் தீர்க்க
எழுந்துவா!
விமலாஸ்
★ பாட்டா செருப்பு
★ ஆடம்பர பொருள்கள்
★ ரேடியோ
இல. 9-15, நவீன சந்தை
சாவகச்சேரி.

விக்கினங்கள் தீர்க்கும்
விக்கினேஸ்வரா போற்றி!
ஸ்ரீ விக்கினேஸ்வரா
ஸ்ரோர்ஸ்
148, கண்டி வீதி,
சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகனின்
பேரருள்
பெற்றுய்வீர்களாக!
சன்றைஸ் றேடேர்ஸ்
இல. 6, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

வேழ முகத்தவனே
பரிவுடன் என்றும்
எம்மைக் காப்பீர்!
22கரட் நகைத் தயாரிப்பில்
50 வருட அனுபவம்...
செ. சபாரத்தினம்
பத்தர்
தங்க மாளிகை
118, கண்டி வீதி,
சாவகச்சேரி.

விநாயகனே வினைகள்
தீர்த்தருள்வாய்!
22 கரட் நகைகளுக்கு...
விஜயா ஜுவல்லறி
நகைத் தொழிற்சாலை
கண்டி றோட்,
சாவகச்சேரி.

பிரணவத்தின் பெரும்
பொருளே பிணி அகற்ற
அருள் தருவாய்!
வீ. எம். கே.
கோல்ட் ஹவுஸ்
நகை மாளிகை
கண்டி வீதி,
சாவகச்சேரி.

அலங்கார விழாக்காணும்
ஆனைமுகா சரணம்!
ராஜன்
ஆபரண மாளிகை
சிறந்த 22 கரட்
நகைகளுக்கு
தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த
பிள்ளையார்!
நேசம் அழகு நகை
22 கரட்டிலான தங்க
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
இல. 4, பிரதான வீதி,
சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகா
வீர வரம் தா!
மங்களா அழகு சாதன
மாளிகை
கண்டி வீதி,
சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகா
வினை தீர்க்க வா!
இந்திரன் ஜுவல்லர்ஸ்
தங்க, வைர, நகை
வியாபாரம்
இல. 10, நவீன சந்தை,
சாவகச்சேரி

வீரகத்தி விநாயகன் அருள்
வேண்டி நிற்கும்...
வதனி
ஆபரண மாளிகை
41, டச்சு றோட்,
சாவகச்சேரி.
கிளை: கண்டி வீதி,
கொடிகாமம்.

(விளம்பர இல. இ-22209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள். ஊசி ஏற்றப்பட்ட, 35 நாட்கள் வயதுடையவை. விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல 15, சினியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். [22258]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5237]

### தேவை

சமூக சேவையில் நாட்டமுள்ள, தங்கிப் பணிபுரியக்கூடிய உதவி மேற்பார்வையாளர் தேவை. 45 வயதுக்கு மேற்பட்ட உடல் நலமுடைய ஆண்/பெண் இருபாலாரும் 15-09-92க்கு முன் விண்ணப்பிக்கவும். இருப்பிட, உணவு வசதிகளுடன் ஊக்குவிப்பு வேதனம் பேசித் தீர்க்கப்படும். இல 856, மே/பா உதயன். [5259]

45 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய நம்மிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட வட்டத் தகட்டு மூடி தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-3071)

### வியாழமாற்றம்

செப்டெம்பர் முதல் வாரத்தில் செவ்வாய் வியாழன் மாற்றங்கள் அக்டோபர் மத்தி வரை சனி வக்கிர சஞ்சாரம். பகவான் ஸ்ரீ நீலகண்டபாபா அற்புதங்களும், வரலாறும் அடங்கியவை. (2ஆம் பதிப்பு) ரூ.8-50. எங்கும் விற்பனையாகின்றன. கிருஷ்ணசாமி புத்தகசாலை, நவீனசந்தை, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof. சத்தியதாஸன். [22263]

### ENGLISH COURSE

மூன்று மாத ஒருங்கமைந்த ஆங்கிலப் பயிற்சி English Grammar with Spoken English and English Literature V. N. Kandasamy A I B Part-I (London) Inter London இல. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில் (22259)

### யந்திரம்

கண்ணூறு, நாவூறு நீங்கவும், வியாபார விருத்திக்கும், கல்வித்தடைகள், விவாகத் தடைகள் நீங்கவும் யந்திரங்கள் எம்மிடம் பெறலாம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை சோதிட நிலையம், கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். [22247]

### பக்தி நூல்கள்

பக்தி நிறைந்த படங்களுடன் சாயிபஜனை ரூபா 20/- சரஸ்வதி பாமாலை ரூபா 20/-, பிள்ளையார் கதை ரூபா 26/- ஆறுபடை கந்தசஷ்டி கவசம் ரூ 20/- அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (5265-B)

### விற்பனையாகின்றன!

**O/L**

எல்லாப் பாடங்களும் வினாத்தாள்கள்—விடைகளுடன்.

**BOND**

புத்தக நிலையம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-3149]

### கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (22262)

### மணமகன் தேவை

யாழ் இந்து, நல்ல குணமுள்ள விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை, சுவாதி நட்சத்திரம், வயது 39 மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. வெளிநாடு செல்ல விரும்பியோரும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 433, மே/பா உதயன். (22249)

கௌரவமான யாழ். இந்து படித்த, அழகிய உத்தியோகம் உள்ள பெண்ணுக்கு நட்சத்திரம் அனுசம் 2, செவ்வாய் 12 இல், கிரகபாவம் 9½ அரசாங்க அல்லது வங்கி உத்தியோகம் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விவரத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 857. மே/பா, உதயன் [5266]

### தவறிவிட்டது

535782628X இலக்க அடையாள அட்டை, ஆனந்தராசா ஆனந்தரூபனின் பிறப்பு, இறப்பு அத்தாட்சி பத்திரம் HNB பாஸ் புத்தகம், பாதிக்கப்பட்டோருக்கு நிதி வழங்கும் பொலித்தீன் பத்திரம் அடங்கிய வெள்ளைப் பை 18-08-92 இல் பழைய பூங்காவிற்கும் ஸ்ரேஷன் றோட்டிற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஆ. இராசலட்சுமி, 443/20, கண்டி வீதி, அரியாலை என்ற விலாசத்திற்கு தயவு செய்து அறிவிக்கவும். (22260)

இளையதம்பி காராளபிள்ளை, ஜெகதீஸ்வரி, தர்ஷினி ஆகியோரின் அடையாள அட்டைகளும் ஒன்பது உணவு முத்திரைகளும் 20-08-92 அன்று கல்லுண்டாய் வெளியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கே. கனகரத்தினம், 100/1, அரசடி வீதி, கந்தர்மடம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். (22265)

## செஞ்சோலை இசை மாலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஆக. 23

செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி எதிர்வரும் 25 ஆம் திகதி இரவு 8-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ)

## கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில் (காளி கோவில்) பரிபாலனசபை

## அங்கத்தவர்களை பதிவு செய்தல்

மேற்படி ஆலய பரிபாலனசபையின் பொதுமகாசபைக் கூட்டம் விரைவில் நடைபெறவிருப்பதால் அங்கத்தவர் இடாப்பு சீர்செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே அங்கத்தவர்களாக சேரவிரும்பும் கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோவில்பற்றை சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட அடியார்கள், உபயகாரர்கள் உடனடியாக பரிபாலனசபையினருடன் தொடர்பு கொண்டு, விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, அதற்குரிய சந்தாப் பணத்தை செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 25-9-1992 வெள்ளிக்கிழமை பி. ப. 5-30 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். இது தொடர்பான விவரங்களை நேரில் கேட்டு அறியலாம். அங்கத்தவர் இடாப்பு 25-09-1992 வெள்ளிக்கிழமை பி. ப. 5-30 மணிக்கு மூடப்படும். இத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
பரிபாலனசபை.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[22253]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31 — 01 — 1942 | 23 — 07 — 1992 |

அமரர்

**இரத்தினம் இலட்சுமிகாந்தன்**

(ஏழாலை மேற்கு)

உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் உள்ளங்களில் இருந்து நீங்காது உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

[4948]

## 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சளிச்சுரத்தினால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 23

குடாநாட்டில் தற்போது 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சளிச்சுரத்தால் பீடிக்கப்படுவது அதிகரித்துள்ளது.

யாழ். போதனாவைத்திய சாலையில் தற்போது அனுமதிக்கப்பட்டுவரும் குழந்தை நோயாளிகளில் அனேகமானோர் இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களே.

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் யாழ். வைத்திய சாலையில் 10 குழந்தைகள் சளிச்சுரத்தாலும், 8 குழந்தைகள் வயிற்றோட்ட நோயினாலும் மரணமடைந்துள்ளன. (இ-15)

## St. John's College, Jaffna and Chundikuli Girls College, Jaffna.

## ADMISSION–1993

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.

   **ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு.**

2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் - **21–09–1992**.
   - அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-1992 முதல் 14-09-1992 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   - ஆ) எக்காரணங் கொண்டும் 14-09-1992க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   - ஈ) 21-09-1992க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும். பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றிற்கு ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்:
   - அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01-02-87க்கும் — 31-01-88க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - ஆ) ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01-02 82 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப் பரீட்சை:

   ஆண்டு ஆறு வகுப்புக்கு 17-10-1992 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

**- அதிபர்கள்.**

[சி-3042]

## 20ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**குலசிங்கம் கந்தையா B.Sc.**

(விஞ்ஞான ஆசிரியர், வேலாயுதம் மகா வித்தியாலயம்)

| ஜனனம்: | மரணம்: |
|---|---|
| 10-04–1935 | 23-08–1972 |

திதி: 09–09–1992

" கடவுள் தனக்குப் பிரியமானவர்களை இளமையிலேயே அழைத்துக் கொள்கிறார் "

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

தாய், மனைவி, மக்கள், மாமி, மைத்துனர், மருமக்கள்.

'இந்திரகிரி',
இரும்பு மதவடி,
சரவெட்டி.

[5252]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இன ஒழிப்பு உள் விவகாரமா?

ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு - கிழக்கில் நடத்தும் போர் வெறும் உள்நாட்டு யுத்தமல்ல. இங்கு வாழும் தமிழ் மக்களை அழிக்கும் இன ஒழிப்புப் போர். தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் தமிழர்களையே பூண்டோடு தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்ற கோட்பாட்டுடன் நடத்தப்படும் போர்.

இந்த உண்மை நிலையை உலகநாடுகள் எதுவும் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என்று, நேற்று முன்தினம் இப்பத்தியில் விசனப்பட்டு எழுதியிருந்தோம்.

ஆனால் ஈழத் தமிழர்கள் அழிக்கப்படுவது மொரிஷியஸ் நாட்டுக்கு ஓரளவேனும் புரிந்திருக்கிறது என்று நம்ப வேண்டி உள்ளது. "இன்றைய சூழ்நிலையில் இலங்கையில் தமிழர்கள் மீதான நடவடிக்கை எமக்குக் கவலை தருகிறது" என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜோன் ரேமண்ட் சென்னையில் வைத்துக் கூறியிருக்கிறார்.

அதேவேளை "இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரமாக இருப்பதால் அதில் மொரிஷியஸ் நேரடியாக தலையிட முடியாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மொரிஷியஸ் இலங்கையை விட, ஏன் தமிழீழத்தைவிட மிகச் சிறிய நாடு. ஆனால் பூரண இறைமையும், தன்னாதிக்கமும் உள்ள சுதந்திர நாடு. அங்கு தமிழர்களும் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் உரிமைகளைக் குறைவின்றி அனுபவிக்கக் கூடிய வாய்ப்பு வசதிகள் உள்ளன.

ஈழத் தமிழ் மக்களின் விவகாரத்தில் மொரிஷியஸ் நாட்டுக்கு எப்போதும் ஓர் அக்கறை உண்டு 1983 இல் ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட போது ஐ. நா. பொதுச் சபையில் முதன்முதலாகக் குரல் கொடுத்த நாடு மொரிஷியஸ் என்பது குறிப்பிடத்தக்கது; மறக்க முடியாதது.

அதற்கு முன்னர் ஐ நாவின் குழு நிலை விவாதங்களின் போது இந்தியா மற்றும் ஆர்ஜன்டீனா போன்ற ஒரு சில நாடுகள் ஈழத் தமிழர் விவகாரத்தைப் பிரஸ்தாபித்தன. ஆனால் பொதுச்சபை அமர்வுகளின்போது ஈழத்தமிழர் கொல்லப்பட்டது குறித்துக் குரல் எழுப்பிய நாடு மொரிஷியஸ் ஒன்றே ஆகும். அரசாங்கத் தலைவர் ஒருவர் எங்கள் பிரச்சினை குறித்து ஐ.நாவில் பிரஸ்தாபித்தார் என்றால் அவர் மொரிஷியஸ் பிரதமர் திரு. ஜெகநாத் தான்.

1983 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இப்போது தமிழர் அழிவு — ஸ்ரீலங்கா அரசு நடத்தும் இனப்படுகொலை— நூறு மடங்கு அதிகமானதாகும்.

எனவே இதனை வெறும் உள்நாட்டு விவகாரம் என்றோ அல்லது உள்வீட்டுப் பிரச்சினை என்றோ கருதிவிட முடியாது. இனப் பிரச்சினைகள் பல நாடுகளில் உள்ளது உண்மைதான். ஐரோப்பிய நாடுகளில் மட்டும அறுபத்திநாலு இனப் பூசல் விவகாரங்கள் பிரச்சினை கொடுத்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அவை இனக்குழப்பங்கள் அல்லது இனச் சண்டைகளே. இலங்கையில் நடப்பது போன்ற அரசாங்கம் திட்டமிட்டு நடத்தும் இனப் படுகொலைகள் அல்ல!

எனவே இந்த இனப்படுகொலையை நிறுத்துமாறு குரல் கொடுக்க மொரிஷியஸ் போன்ற நாடுகளும், நிதி உதவிகளை நிறுத்தி அழுத்தம் கொடுப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகளும் ஸ்ரீலங்கா அரசை வழிக்குக் கொண்டு வர முடியாதா?

---

நீதி மன்ற உத்தரவை அடுத்து

# ஈழ அகதிகள் பயணம் இறுதி நேரத்தில் ரத்து

சென்னை, ஆக. 23

சென்னை உயர்நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவைத் தொடர்ந்து. கடந்த வியாழன் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்படவிருந்த 131 அகதிகளின் பயணம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவதை இம்மாதம் 28 ஆம் திகதிவரை இடைநிறுத்தி வைக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் கடந்த வியாழன் தமிழக அரசுக்கு உத்தரவிட்டது தெரிந்ததே.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமிழர் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோர் தாக்கல் செய்த மனுவொன்றைத் தொடர்ந்து இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கையில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்ந்து சண்டை நடைபெறுகிறது. இதனால் இலங்கை திரும்பும் அகதிகள் ஆபத்தான நிலைமையைச் சந்திக்கின்றார்கள். இந்த நிலையில் இந்திய அரசும் இலங்கை அரசும் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கின்றன. இது மனிதாபிமானத்துக்கு எதிரான செயல்'' — என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

(ஒ-எ)

## ராணுவ நடவடிக்கையின் மத்தியிலும் தேர்த்திருவிழா

### அளவெட்டி நாராயணர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், ஆக. 23

அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

அளவெட்டி வடக்கில் அன்றைய தினம் பெரும் இராணுவ நடவடிக்கைகள் காலை முதல் மாலை வரை நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், அயற் கிராமங்களில் பதற்றம் நிலவிய போதிலும், தேர்த் திருவிழா வழமை போல சிறப்பாக நடைபெற்றது. ஆலயச் சுற்றாடலில் எவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை.

நாராயணப் பெருமான் தேரில் எழுந்தருளி வரும் காட்சியைத் தரிசிப்பதற்கு பெரும் எண்ணிக்கையான பக்தர் கூட்டம் வந்திருந்தது. முற்பகல் 11-30 மணியளவில் தேர்ப்பவனி இடம் பெற்றது. தேர்த்திருவிழாவை அடுத்து நண்பகல் 12-30 மணிக்கு மகேஸ்வர பூசை நடந்தது.

தேர்த்திருவிழாவுக்கு முன்னர் காலை 10 மணியளவில் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரால் எழுதப்பட்ட 'கீதோபதேசம்' என்ற நூல் ஆலய மண்டபத்தில் வைத்து வெளியிடப்பெற்றது. ஆலய பிரதமகுரு கலாநிதி வீரசைவ திவத்திரு. உருத்திர புரேஸ்வரக் குருக்கள் நூலை வெளியிட்டு வைத்தார். (அ-51)

## இனப்பிரச்சினை:

## முஸ்லிம் காங்கிரஸின் தீர்வு செப்: 5 இல் வெளியாகுமாம்

கொழும்பு, ஆக. 23

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தனது யோசனைகள் அடங்கிய சமாதானத் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செப்டம்பர் 5ஆம் திகதி வெளியிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் 5 ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்தத் திட்டமிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்த யோசனைகள் வெளியிடப்படும் என்று கட்சியின் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்தார்.

தமிழ்க்கட்சிகளுடன் பல தடவை பேசிய பின்னர், அவர்களின் நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் நன்கு அறிந்துள்ளது. எனவே நியாயமானதும், சகல சமூகங்களுக்கும் நீதி வழங்குவதாகவும் அமையும் விரிவான திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பது காங்கிரஸின் கடமையாகிறது என்றும் அவர் சொன்னார்.

## அழிவுகளிலிருந்து...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாக நிலத்தைத் துளைத்து வன்றுபடுத்தும் பெருச்சாளி அவரது வாகனமாக உள்ளது.

விநாயகன் தனக்கு மேலே ஒரு தலைவனில்லாதவன். எமது மக்களுக்கு வரக்கூடிய அழிவுகளிலிருந்து அவர்களை காப்பாற்றும் வல்லமையுடையவனாக எல்லோருக்கும் பொதுவானவனாக விநாயகர் விளங்குகிறார்.

விநாயகருக்குரிய மூன்று சிறப்பான விரதங்கள் உண்டு. 1. வாரம் தோறும் அனுஷ்டிக்கும் சுக்கிரவார விரதம். 2. மாதந்தோறும் அனுஷ்டிக்கும் சதுர்த்தி விரதம். 3. வருடத்தில் ஒரு தடவை கைக்கொள்ளப்படும் விநாயக சஷ்டி விரதம்.

வெள்ளிக்கிழமை தோறும் நினைத்த காரிய சித்திக்காகவும், தடை நீக்கத்திற்காகவும் சுக்கிரவிரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

விநாயக சஷ்டி விரதம் (பெருங்கதை விரதம்) கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையான 21 நாள்வரை.

விநாயக சதுர்த்தி இது விரதங்களுள் மிக விசேடமானது. இதைப் பெருமானின் உற்பவதினம் என்பர்.

ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தித் திதி 31 08-1992 அன்று வீரகத்தி விநாயகராலய விசேட வைபவ காலத்திற்குள் நடைபெறவுள்ளது. கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது. சூதமுனிவரால் பஞ்ச பாண்டவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையுடையது.

மாத சதுர்த்தி விரதம் மாதந்தோறும் வருகிற பூர்வ பட்சச் சதுர்த்தி நாட்களும் விநாயகருக்குரிய விரத நாட்களே. இவ் விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர் ஆவணிச் சதுர்த்தியில் விரதமிருக்கலாம். மாதந்தோறும் விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியுடன் சங்கல்ப பூர்வமாக ஆரம்பிக்கலாம். 21 வருடம் அல்லது 07 வருடம் அல்லது 21 மாதச் சதுர்த்தி [illegible].

★

---

## நல்லூர் லயன்ஸ் இலவச வைத்திய சேவை

நல்லூர் லயன்ஸ் கழகம் வசதி குறைந்தோருக்கான இலவச வைத்திய சேவையை நடத்தி வருகிறது.

இச்சேவையின் ஒரு பகுதியாக இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு நல்லூர் செம்மணி வீதியில் உள்ள மெடிஎயிட்ஸ் மருத்துவ மனையில் வைத்திய சிகிச்சையும், வைத்திய ஆலோசனையும் வழங்கப்பட உள்ளன. (இ)

## சுமார் ஒரு லட்சம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

பல முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், சுகாதாரப் பகுதியினரும் பல முகாம்களில் சுகாதார வசதிகளைச் செய்துள்ளனர்.

சுழிபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தோருக்கு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபம், மெய்கண்டான் மகா வித்தியாலயம், பண்ணாகம் முருகன் கோவில் ஆகிய இடங்களில் அகதி முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அராலிப்பகுதியில் இருந்து நவாலிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினர் தங்க இடமின்றி அலைந்து திரிவதை நேற்றுக் காணமுடிந்தது நவாலி மத்திய மகா வித்தியாலயம், ஏனைய சிறிய பாடசாலைகள் சிலவற்றில் அராலி அகதிகள் மிகுந்த இடநெருக்கடியுடன் தங்கி உள்ளனர்.

### உடுவிலில்

இடம்பெயர்ந்த மக்களில் பலர் உடுவில் அரச அதிபர் பிரிவில் உள்ள உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், முருகமூர்த்தி கோவில் இணுவில் கிறிஸ்தவ ஆச்சிரமம், கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய இடங்களில் தங்கி உள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை முதல் மூன்று நாட்கள் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவினரும், அதனை தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவை சங்கம், சர்வோதய மருதனார் மடக் கிளை ஆகியனவும் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### சண்டிலிப்பாயிலும்

அதேபோல சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு முதல் மூன்று நாட்களுக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினரும், அதனை தொடர்ந்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவும் உணவு மற்றும் உலர் உணவு போன்றவற்றையும் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

[அ-5-162 15-13 28-20 -152-140]

## மல்லாகம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் பெரும் குழி தோண்டப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினாலும் பல வீடுகள் பெரும் சேதமடைந்தன. தர்மலிங்கம் மதன் [வயது 17] என்பவர் உட்பட மேலும் சிலர் காயமடைந்தனர்.

அளவெட்டியிலும் நேற்று இரு இடங்களில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது.

அளவெட்டி தெற்கு அழுக்கைச் சந்திக்கு அருகாமையிலும், அளவெட்டி வடக்கு ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி ஆசிரமத்திற்குப் பக்கத்திலும் இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இப்பகுதிகளிலும் விமானங்கள் நடத்திய றொக்கட் மற்றும் கலிபர் தாக்குதல்களினால் பல வீடுகள், பயன்தரு மரங்கள் ஆகியன சேதமுற்றன.

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலைப் பகுதிகளிலும் நேற்று விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று வலி. மேற்கு, வலி. வடக்குப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல்களும் ஆங்காங்கே இடம்பெற்றன.

[உ-3-5-13-15-28-143-162 -152]

## நிவாரண விநியோகம்


யாழ்ப்பாணம் ஆக. 23

புங்குடுதீவு — நயினாதீவு ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களின் ஆகஸ்ட் மாதத்துக்கான நான்கு வார இலவச உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் நேற்று சனிக்கிழமை முதல் மேற்படி சங்கக் கிளைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாவனையாளர்கள் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது [இ]

---

உ



## இத்தனை மௌனம் ஏனோ?

இருளெனும் துயரம் நீக்கும்
இன்னுயிர் மேலாம் கொள்கை
ஒரு ''தமிழ்த் தேசம்'' என்ற
ஒப்பிலாக் கனவு நனவாய்
வரும் திருநாளே தமிழர்
வாழும் நாள் உனது நாமம்
தரும் பொருள் தமிழே வடிவேல்
தயக்கமேன் அரக்கரை வெல்!

சத்தியம் சாகலாமோ
சங்கரன் குமரா உந்தன்
முத்தமிழ் சிதைய மகுடம்
முரடொன்று கொள்ளலாமோ?
எத்தனை பெரிய யாகம்
எங்களின் வேள்வி கண்டும்
இத்தனை மௌனம் ஏனோ?
இளைஞனே நல்லை வேலா!

- நெடுந்தீவு லஷ்மன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றும்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சண்டிலிப்பாய்ப் பகுதியில் உள்ள ஆலங்குழாய் வயல் வெளிகளிலும் விழுந்து வெடித்தன.

பண்டிப்புலம், சில்லாலை, தொலிபுரம் பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

[உ 3 5-13-15-162-28]

### சிறப்பாக விளையாடிய

# இலங்கை அணி ஆஸியிடம் பரிதாபமாகத் தோற்றது!

கொழும்பு, ஆக: 23 ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய இலங்கை அணி இறுதியில் 17 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இறுதி நாளான நேற்று ஆஸ்திரேலிய அணி வீரர்களின் சிறப்பான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் தமது விக்கெட்டுக்களை இழந்து டெஸ்ட் போட்டியில் பரிதாபகரமாகத் தோற்றனர்.

இந்த ஆட்டத்தில் ஆஸி. அணி முதலில் 256 ஓட்டங்களையும், இலங்கை அணி 8 விக்கெட் இழப்புக்கு 547 ஓட்டங்களையும் பெற்றன என்பது தெரிந்ததே.

நேற்று தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 471 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

வெற்றி பெறுவதற்கு 181 ஓட்டங்களை மட்டுமே பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 164 ஓட்டங்களை மட்டும் எடுத்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டத்தில் தோல்வியடைந்தது.

[உ-10]

## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை ஆக 23

நல்லூர் கந்தசுவாமி கோவில் 21 ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை கஜவல்லி — மஹாவல்லி உற்சவம் காலை 7.00 மணிக்கும், வேல்விமான உற்சவம் மாலை 5 00 மணிக்கும் நடைபெறும்.

ஆலயச் சுற்றாடலில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்)- கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''சிங்கமுக சூரன்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 00 மணிக்கு— கந்தபுராணப் படிப்பு, பிற்பகல் 3. 00- மணிக்கு பௌராணிகர் மு தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை.

[உ-30]

## மீண்டும் இசையரங்கு

யாழ்ப்பாணம், ஆக 23

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ முருகன் தண்ணீர்பந்தல் சபையினரால் நாளாந்தம் நடத்தி வரப்பட்டு பின்னர் நேற்று இடை நிறுத்தப்பட்ட தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சிகள் மீண்டும் இன்று ஆரம்பாகின்றன.

இன்றைய இசை அரங்கில் திரு. எஸ். பத்மலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி இடம் பெறும்.

(உ-3)

## இன்று நடக்கும் பட்டி மன்றம்

சங்கத்தானை, ஆக. 23

இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. முதல் நாள் திருவிழாவான இன்று இரவு ஏழு மணிக்கு— 'செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதில் பெரிதும் முன்னிற்பவன் — கர்ணனா, கும்பகர்ணனா?'' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும். கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் தலைமையில் இப்பட்டி மன்றம் நடைபெறும்.

மீனாட்சி அம்பாள் அடியார்கள் ஆதரவில் இந்நிகழ்ச்சி நடைபெறும் [illegible]

[அ-140]

# பண்டத்தரிப்பு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு பண்டத்தரிப்பு கோட்டத்தில் முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையங்களில் — 12 நிலையங்கள் தற்போது இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

★ மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அமைந்த மண்டபம் I, மண்டபம் II ஆகிய இரு பரீட்சை நிலையங்களும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் யூனியன் கல்லூரியிலும் —

★ அளவெட்டி அருணாசலம் வித்தியாலய பரீட்சை நிலையம் சங்கானை சிவப்பிரகாச ம. வித்தியாலயத்திலும் —

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் மண்டபம் I, மண்டபம் II ஆகிய இரு நிலையங்களும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும்—

★ அராலி இந்துக் கல்லூரி பரீட்சை நிலையமும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும்—

★ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய பரீட்சை மண்டபம் சித்தங்கேணி கணேச வித்தியாலயத்திலும்—

★ சித்தங்கேணி கணேச வித்தியாலய பரீட்சை நிலையம் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும்—

★ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பரீட்சை நிலையம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் —

★ சில்லாலை றோ. க. த. பாடசாலை பரீட்சை மண்டபம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும்—

★ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபம் I, மண்டபம் II ஆகிய இருபரீட்சை நிலையங்களும் முறையே மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் புனித ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலையிலும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-5-163]

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் தோமா

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மாகியம்பதியை வசிப்பிடமாய் கொண்டவருமாகிய சண்முகம் தோமா (அரசாங்க ஒப்பந்தகாரர்) தனது 90 ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி தோமாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும், லூசி தோமா (ஓய்வு பெற்ற மருத்துவ தாதி), காலஞ்சென்ற நல்லையா (அதிபர்), காலஞ்சென்ற டானியேல் (கொத்தணி அதிபர், ஏழாலை), காலஞ்சென்ற ஜேக்கப் (காற்றலை இயக்குனர்), தேவமணி, ஞானமணி, றோகினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், துரைசிங்கம் (ஓய்வு பெற்ற O. A.), நவநீதகிருஷ்ணன் (பொறியியலாளர்), பெஞ்சமின் (A. A. D. S. I.), கிறிஸ்ரபெல் செல்லம், யேசுமலர், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (ஞாயிறு) காலை 10 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.
[22277]

## திருமதி செல்லம்மா தியாகராஜா

பூநகரி செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், இல. 65, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தியாகராஜா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ச. தியாகராஜாவின் அன்பு மனைவியும், திருமதி சிவஜோதி, திரு. தி. திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற தபாலதிபர்), சிவசாமி (புத்தூர்), மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவகடாட்சம், சிவஞானேஸ்வரி (வத்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சி. வல்லிபுரம், திருமதி திருநாவுக்கரசு (விக்னேஸ்வரா கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை), மகாலட்சுமி, செல்வநாயகி, திரு. சுபராஜசிங்கம் (விற்பனைப் பிரதிநிதி கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [23-08-92] இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. தி. திருநாவுக்கரசு (மகன்)
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

55, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[22266]

## துரைராசா கண்ணம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம், மடத்துவெளியைச் சேர்ந்த துரைராசா கண்ணம்மா 22 - 08 - 92 அன்று காலமாகிவிட்டார். இவர் துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லதம்பி - பாக்கியம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகமுத்து ஆகியோரின் மருமகளும், இரவீந்திரன் (பிரான்ஸ்), மோகனதாஸ் (இந்தியா), நிர்மலாதேவி, சுவேந்திரராசா (யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் தாயாரும், மிதிலாராணியின் மாமியாரும், நாகரத்தினம் (சமநல சேவை நிலையம், புங்குடுதீவு), சற்குணபூபதி, சொர்ணலிங்கம் (வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24 - 08 - 92 திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு தகனக்கிரியைக்காக 34, செல்லர் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
து. சுவேந்திரன் (மகன்)

34, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[22267]

## நவரட்ணம் சின்னராசா

(முன்னாள் இ. போ. ச. நடத்துனர்)

சுந்தரோடையைச் சேர்ந்த நவரட்ணம் சின்னராசா 19 - 8 - 92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் நவரட்ணம் மற்றும் காலஞ்சென்ற திருமதி நவரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், நளினிகா, லலிதா, ஜெரூபன், சற்சொரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சாந்தலிங்கம் புனிதமலர், சுகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மா. விஜயகுமார்.

''திருத்தணிகை''
கந்தையா உபாத்தியார் வீதி,
சுந்தரோடை,
சுன்னாகம்.
[22268]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சி. இளையபிள்ளை

மயிலணி வடக்கைச் சேர்ந்த திருமதி சி. இளையபிள்ளை 22 - 8 - 92 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆ. சின்னப்புவின் அன்பு மனைவியும், அப்புலிங்கம், குணமணி குணபாலசிங்கம், தேவி, அப்பிளா, பாலையா, தம்பிஐயா (கட்டட ஒப்பந்தகாரரும், புவிபா குறாப் உரிமையாளரும்), தேசிகாவதி, இராசகுலம், தேவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடேசு, நாகமுத்து, கதிரேசு, சண்முகம், அமுதலிங்கம், வசந்தாதேவி, அம்மா, பாக்கியம், ரஞ்சிதமலர், புஸ்பலீலா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (23-8-92) இன்று காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
[22275]

## காசிப்பிள்ளை சிவலிங்கம்

(முன்னாள் விவாகப் பிறப்பு, இறப்புப் பதிவாளர்)

தையிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த காசிப்பிள்ளை சிவலிங்கம் 22-08-92 இல் காலமானார். அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், ஈஸ்வரி, ஈஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கா. செல்லத்துரை, காலஞ்சென்ற கா. ஐயாத்துரை, நாகலிங்கம் - சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் இராசரத்தினம், அவனிகா ஆகியோரின் மாமனாருமாவார்.

ஈமக்கிரியைகள் விக்னேஸ்வரன் வீதி, மலை வேம்படி சுதுமலையில் இன்று (23-08-92) மு. ப. 11-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஜெகதீஸ்வரன் (மகன்)

மலைவேம்படி,
சுதுமலை.
[22274]

## சின்னத்தம்பி நல்லையா

21, அரச வீதி, நல்லூரைச் சேர்ந்த சின்னத்தம்பி நல்லையா (ஓய்வுபெற்ற யாழ். மாநகர சபை ஊழியர்) காலமாகிவிட்டார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், பாக்கியராசா (லண்டன்), சுகுமார் (கனடா), நந்தகுமார், நிரஞ்சனாதேவி, ரேணுகாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற இரத்தினம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-8-92) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனகம்மா. (மனைவி)

இல 21, அரச வீதி,
நல்லூர்.
[22278]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2' இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.